மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 70, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

70—

கூட்டுறவு ஒன்றியம்

***30198—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தோடு இணைந்துள்ள திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைத் தனியாகப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டத்தோடு இணைந்துள்ள திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்தைத் தனியாகப் பிரிப்பதற்குத் தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர், திருவண்ணாமலை ஒன்றுபட்ட வட ஆற்காடு மாவட்டமாக இருந்தபொழுது, 1976 ஆம் ஆண்டில் வட ஆற்காடு மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் துவக்கப்பட்டது. தற்பொழுது திருவண்ணாமலை, வேலூர் உள்ளடங்கிய இரண்டு மாவட்டங்களில் 860 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 2,45,000 லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது. இதில் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த 1,39,000 லிட்டர் பால் பதப்படுத்தப்படுகிறது. இந்த 2,45,000 லிட்டர் பாலில், 74,000 லிட்டர் பால் உள்ளூரில் விற்பனை செய்யப்படுவதுபோக, மீதி 1,71,000 லிட்டர் பால் பதப்படுத்தப்பட்டு

2009 பிப்ரவரி 26]

சென்னைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பால், திருவண்ணாமலை மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்டு, அங்கிருந்து 100 கிலோ மீட்டர் தூரம் உள்ள வேலூருக்குக் கொண்டு வரப்பட்டு, பதப்படுத்தப்பட்டு சென்னைக்குக் கொண்டு செல்வதைவிட, திருவண்ணாமலை மாவட்டத்திற்கெனத் தனியாக திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் அமைக்கப்பட்டு, அதன்மூலமாக அங்கே பால் பதப்படுத்தப்பட்டால், திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்தியாளர்கள் பலன் பெறுவார்கள் என்று கூறி, அரசு திருவண்ணாமலை மாவட்டத்திற்குத் தனியாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது வேலூர் மாவட்டத்தை உள்ளடக்கிய அந்த ஒன்றியம் தனி அலுவலர் மூலமாக நிருவகிக்கப்படுகிறது. தனி அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட ஓர் அதிகாரம் மட்டும்தான் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக, ஓர் ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றால்கூட, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்றால், பொதுக் குழுவினைக் கூட்டி, பெரும்பான்மையானவர்கள் பிரிந்து போவதற்கு ஒத்துக்கொள்ள வேண்டும். வாக்கெடுப்பின்மூலமாக அதிக பெரும்பான்மையுள்ளவர்கள் பிரிந்து போவதற்கு வாய்ப்பு இருக்குமேயானால்தான், இரண்டாகப் பிரிக்க முடியும். தனி அலுவலருடைய பொறுப்பில் இருக்கிற காலத்தில் அப்படிச் செய்யக்கூடாது என்று உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு உள்ளது. திரு. குட்டப்பனுடைய வழக்கிலே புதியதாக ஓர் உறுப்பினரைச் சேர்ப்பதற்குக்கூட, தனி அலுவலர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்படவில்லை. எனவே, கூட்டுறவுத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, பொதுக் குழுவைக் கூட்டி majority நிரூபிக்கப்படுகிற நேரத்தில், அதுபோன்ற பிரிவினை ஏற்படுத்த முடியுமே தவிர, அதுவரை இதுபோன்ற செயல்பாடுகளைச் செயல்படுத்துவதற்குத் தனி அலுவலருக்கு அதிகாரம் ஏதுமில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

[2009 பிப்ரவரி 26

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், 1989 ஆம் ஆண்டு வட ஆற்காடு மாவட்டம், வேலூரிலே இருந்து பிரிக்கப்பட்டது. ஒன்றுபட்ட மாவட்டமாக இருந்தபொழுது 860 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன. தற்பொழுது திருவண்ணாமலை மாவட்டத்தில் மட்டும் 658 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சிறப்பான முறையிலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. வேலூர், திருவண்ணாமலை இரண்டு மாவட்டங்களிலே இருக்கின்ற மொத்த பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் கூடுதல் சங்கங்கள் திருவண்ணாமலை மாவட்டத்திலே செயல்படுகின்றன. கூடுதலாகப் பால் திருவண்ணாமலை மாவட்டத்திலே உற்பத்தி செய்யப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிற 658 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 2,25,248 பால் உற்பத்தியாளர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் மூலமாக தினமும் 2,50,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, இதிலே 1,85,000 லிட்டர் பால், வேலூருக்கு அனுப்பப்படுகிறது. எனவே, திருவண்ணாமலை மாவட்ட பால் உற்பத்தியாளர்களுடைய நலனைக் கருத்திலேகொண்டு, அரசு அரசியலை நோக்காமல் திருவண்ணாமலை மாவட்டத்தில் நிச்சயமாகப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தை அமைத்துத் தரவேண்டும் என வலியுறுத்தி, அதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அரசியல் உள்நோக்கம் ஏதும் இல்லை. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், தொடர்ந்து இதை வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள். சட்டத்தினுடைய விதிகள் இதைப்போன்று பிரிப்பதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கின்றன. தனி அலுவலர்கள் இருக்கக்கூடிய காலத்தில், அவர்கள் பணியாற்றக்கூடிய காலத்தில், அன்றாடப் பணிகளைக் கவனிப்பதற்குத்தான் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, சாதாரணமாக ஒரு உறுப்பினரைப் புதிதாகச் சேர்ப்பதற்குக்கூட அதிகாரம் இல்லை. அப்படி இருக்கிற சூழ்நிலையிலேதான், புதிதாகக் கூட்டுறவுத் தேர்தல் முடிந்த பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த General Body—யைக் கூட்டி, majority இருக்குமேயானால், பிரிந்து போவதற்கும் ஒத்துக்கொள்ள வேண்டும். அதை இரண்டாகப் பிரிப்பதற்கு, இன்னும் சொத்துகள் இருக்கின்றன. அந்த ஒன்றியத்திற்கு இருக்கக்கூடிய சொத்துகளையும்

2009 பிப்ரவரி 26]

பிரித்து எடுக்க வேண்டும். அதற்கு அதிகாரம் தனி அலுவலருக்கு இல்லாத காரணத்தால், தேர்தல் முடிந்த பிறகு, பொதுக் குழுவைக் கூட்டித்தான் இதில் முடிவெடுக்கப்படுமே தவிர, வேறு அரசியல் உள்நோக்கம் ஏதும் இதில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குறுகிய கால வினா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறுகிய கால வினா எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

1—

நெடுஞ்சாலைகள்

***96829—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, புத்தூர்—பெரம்பூர் மற்றும் பெரம்பூர்—மாதிரவேளூர் நெடுஞ்சாலைகளை உடனடியாகச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சீர்காழி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுள்ள 9.4 கிலோ மீட்டர் நீளமுள்ள மூன்று மாவட்ட இதர சாலைகளை ஒரு வழித் தடத்திலிருந்து இருவழித் தடமாக அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார். அந்தப் பணி இதுபோன்ற மாவட்ட இதர சாலைகள், இன்னும் குறிப்பாக, ஆற்றுப் படுகை, அதேபோல பாறைகள் இருக்கக்கூடிய பகுதிகளிலே, கனரக வாகனங்கள் அதிக சுமை ஏற்றிச் செல்லக்கூடிய காரணத்தினால், நபார்டு வங்கியினுடைய சிறப்பு அனுமதியைப் பெற்று, கடன் பெற்று, அதற்குப் பிறகு இந்த மாவட்ட இதர சாலைகளை, இதுபோன்ற சாலைகளை அகலப்படுத்தி மேம்படுத்தலாம் என்று திட்டமிட்டு,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS